**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தாராபுரம்,**
**முன்னிலை : திரு.R.பாண்டி மகாராஜா.,B.Sc.,B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, தாராபுரம்**
2026-ம் ஆண்டு ஜுலை மாதம் 28-ம் நாள் செவ்வாய்க்கிழமை
**இ.ம.எண்.7/2026 in அ.வ.எண்.392/2015**

K.துரைசாமி .....மனுதாரர்/வாதி

..எதிராக..

S.கோவிந்தராஜ் ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது 15.07.2026-ம் தேதியன்று இறுதியாக என் முன்னர் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுப்பிரமணியன் B.Com.,LLB., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.T.சேகர் B.Sc.,LLB., அவர்கள் ஆஜராகியும், மனு, எதிருரை பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றத்தால் வழங்கிடும்,

**உத்தரவு**

இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள திருத்தங்களை அசல் வழக்கின் வழக்குரையில் மேற்கொள்வதற்கான அனுமதி கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை VI, விதி 17 மற்றும் பிரிவு 151-ன் கீழ் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:**

இந்த மனுவின் அசல் வழக்கின் சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 77.1/2 செண்ட் விஸ்தீரண பூமியானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்ற விளம்புகை பரிகாரத்துடன், நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டது. மேலும், இந்த அசல் வழக்கின் சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ரீ.ச.எண்.266/3-ல் கட்டுப்பட்ட 77.1/2 செண்ட் விஸ்தீரண



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2026.07.28 15:43:08 +0530

பூமியில் 16 செண்ட் விஸ்தீரணமானது நெடுஞ்சாலை அமைப்பதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டு ரீ.ச.எண்.266/3B என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கான இழப்பீடு தொகையானது வாதிக்கு வழங்கப்பட்டுவிட்டது. ஆகவே, தற்போது வழக்குரையின் சொத்து விவரத்தின் விஸ்தீரணத்தினை திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, இதன் அசல் வழக்கின் வழக்குரையில் திருத்தம் செய்வதற்காக இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:-</u>**

இந்த வழக்கின் சொத்தில் 12 செண்ட் விஸ்தீரணமானது 03.07.2012-ம் தேதியன்று ஆர்ஜிதம் செய்யப்பட்டு ரீ.ச.எண்.266/3B என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதை வாதி நிரூபிக்க கடமைப்பட்டவராவார். மேலும், இந்த வாதியால் 25.04.2023-ம் தேதிய குறுக்கு விசாரணையில் நெடுஞ்சாலைக்காக 7 செண்ட் நிலம் மட்டுமே கையகப்படுத்தப்பட்டு இழப்பீடு தொகை பெற்றுக் கொள்ளப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், 16 செண்ட் விஸ்தீரணமானது கையகப்படுத்தப்பட்டதாக குறிப்பிட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல. இந்த மனுவானது எவ்வித அடிப்படை முகாந்திரமும் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், இதன் அசல் வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு 3 வருடங்களுக்கு முன்பாகவே நிலமானது ஆர்ஜிதம் செய்யப்பட்டதாக மனுவில் எடுத்துரைத்துள்ள நிலையில், எவ்வித சரியான காரணமும் இன்றி தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவானது நிலைக்கத்தக்கதல்ல. எனவே, இந்த மனுவினை தள்ளுபடி செய்யப் பிரார்த்திக்கப்படுவதாக எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இந்த மனுவில் இருதரப்பிலும் எவ்விதமான சாட்சிய, சான்றாவணங்களும் முன்னிடப்படவில்லை. இந்த மனுவில், இருதரப்பின் வாதங்கள் கேட்கப்பட்டன மற்றும் வழக்கு கோப்புகள் பரிசீலனை செய்யப்பட்டன.



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2026.07.28 15:43:13 +0530

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்? "இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா" என்பதேயாகும்.

**5. தீர்வு:–**

5.1. இந்த மனுவில் மனுதாரர்/வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால், இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களை அசல் வழக்கின் வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதிக்குமாறு பிரார்த்திக்கப்படுவதாக வாதிடப்பட்டது. அதேவேளையில், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால், இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என வாதிடப்பட்டது.

5.2. இந்த மனுவின் அசல் வழக்கின் சொத்தின் மீது விளம்புகை மற்றும் நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கின் சொத்து விவரத்தின் விஸ்தீரணத்தில் 16 செண்ட் பூமியானது அரசால் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணத்தில் நில ஆர்ஜிதம் நீங்கலாக தீர்வு காண்பதற்கு இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தமானது அவசியமாக அமைந்துள்ளதை காண முடிகிறது. மேலும், இந்த மனுவில் இடம் பெற்றுள்ள சங்கதிகள் காலதாமதத்துடன், இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை எடுத்துரைக்கின்ற போதிலும், இந்த மனுவில் கோரப்பட்டுள்ள திருத்தத்தினால் இதன் அசல் வழக்கின் விசாரணையில் காலதாமதம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் எதுவும் இல்லை. மேலும், இந்த மனுவினை அனுமதிப்பதன் வாயிலாக அசல் வழக்குரையில் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தத்தினால் தரப்பினர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்பதை தெளிவாக அறிய முடிகிறது. அதேவேளையில், இந்த மனுவினை நிராகரிக்கும் பட்சத்தில் அசல் வழக்கின் சொத்து விவரத்தில் வாதிகளின் உரிமை மூலம் தொடர்பான சொத்தின்



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2026.07.28 15:43:17 +0530

விஸ்தீரணம் தவறாக அமைவதற்கு வாய்ப்பாக அமைந்துவிடும் என்பது தெளிவாக நிரூபணமாகிறது. அதேவேளையில், இந்த மனுவினை காலதாமதமாக தாக்கல் செய்ததால் எதிர்மனுதாரர்/பிரதவாதிக்கு ஏற்பட்டுள்ள சிரமத்தினை (inconvenience) ஈடு செய்யும் விதமாக மனுதாரர்/வாதியால் ரூ.1000/- வழங்கப்பட வேண்டும் என்று உத்தரவிடுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அதனடிப்படையில், இந்த மனுவானது மேலே விவாதிக்கப்பட்டதற்கிணங்க ரூ.1000/-த்தினை மனுதாரர்/வாதி வருகின்ற 03.08.2026-ம் தேதிக்குள் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு வழங்கிட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த மனுவானது அனுமதிக்கப்படுகிறது. அதேவேளையில், மேற்காணும் நிபந்தனையானது மனுதாரர்/வாதியால் பூர்த்தி செய்யப்படாத நிலையில், இந்த மனுவானது தானாகவே தள்ளுபடி ஆகிவிடும் என்று இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 28.07.2026-ம் தேதி கையெழுத்து செய்யப்பட்டது.

PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2026.07.28 15:43:22 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.

<u>மனுதாரர் & எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி & சான்றாவணங்கள்</u> – இல்லை

PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2026.07.28 15:43:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.

***Fair order***
*I.A.No.7/2026*
*in*
*O.S.No.392/2015*
*28.07.2026*
*DMC, DPM*